
20

அரசியல் சிந்தனை நூல் வரிசை

# தமிழ் மொழி புறக்கணிப்புக்கு வயது— 64





வெளியீடு
சமூக விஞ்ஞான ஆய்வு மையம்

விலை: 30.00

# முன்னுரை.

சமூக விஞ்ஞான ஆய்வு மையம் மாதந்தோறும் வெளியிடும் அரசியல் சிந்தனை நூல்வரிசையில் 20 வது நூலாக சி.அ.யோதிலிங்கம் எழுதிய "தமிழ் மொழி புறக்கணிப்புக்கு! வயது 64" என்ற இச்சிறு நூல் வெளிவருகின்றது. தனிச்சிங்களச்சட்டம் நிறைவேற்றப்பட்டு கடந்த ஆனி 15 ம் திகதியுடன் 64 வருடங்களாகின்ற நிலையில் தமிழ் மொழி புறக்கணிப்பு பற்றி மீளாய்வை செய்வதற்கு இந்நூல் பெரிதும் உதவும் என நம்புகின்றோம்.

தமிழ் மொழி புறக்கணிப்பு என்பது இன அழிப்பின் ஒரு பகுதியே! இனப்பிரச்சினை என்பதே தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது அழிக்கப்படுவதுதான். அதாவது தேசத்தை தாங்குகின்ற தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம் கலாச்சாரம் என்பவற்றை அழிப்பது தான். ஏனைய தூண்களைப் போலவே மொழியும் இங்கு முக்கியமானது. மொழி அழிந்தால் இனமும் அழியும் என்பதே வரலாறு கற்றுத்தந்த பாடம்.

தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதை அழிப்பது என்பது சுதந்திரத்திற்கு முன்னரே திட்டமிடப்பட்ட விடயம். அதற்கான ஆரம்ப வேலைகள் சுதந்திரத்திற்கு முன்னரே உருவாகி விட்டன. நிலப்பறிப்பே பெருந்தேசியவாதிகளது ஆரம்ப இலக்கு. நிலப்பறிப்பு என்ற வகையில் கல்லோயாத்திட்டம் சுதந்திரத்திற்கு முன்னரே திட்டமிடப்பட்டது. சுதந்திரம் தந்த அதிகாரத்தைக் கொண்டு எந்தவித தடங்கலுமில்லாமல் நடைமுறைக்கு வந்தது. தொடர்ந்து தாயகத்தின் மையமாக இருக்கின்ற திருகோணமலை மாவட்டத்தில் அல்லத்திட்டம், கந்தளாய்த்திட்டம், மொறவேவாத்திட்டம், மகாதிவுல்வேவாத்திட்டம், பதவியாத்திட்டம் என நிலப்பறிப்புக்கள் வளர்ந்தன. இன்று அது முல்லைத்தீவு மாவட்டம் வரை பரவியுள் ளது.

மொழிப்புறக்கணிப்பு 1956 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ம் திகதி நிறைவேற்றப்பட்ட தனிச்சிங்களச்சட்டத்துடன் ஆரம்பமானது. 1972 ம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியல் யாப்புடன் யாப்பு அந்தஸ்து பெற்று முழு வடிவம் பெற்றது. தொடர்ந்து இந்தியாவின் அழுத்தத்தினால் 13 வது யாப்புத்திருத்தம், 16 வது யாப்புத்திருத்தம் என்பவற்றின் மூலம் தமிழ் மொழிக்கும் அரச கரும மொழி அந்தஸ்து கொடுத்தாலும் பெயரளவிற்கு இருந்ததே தவிர அது நடைமுறைக்கு வரவில்லை. சிங்களப் பிரதேசங்களில் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற திருகோணமலை, அம்பாறை, நுவரேலியா மாவட்டங்களில் கூட நடைமுறைக்கு வரவில்லை.

இன அழிப்பச் செயற்பாட்டை விரிந்த கோணத்தில் பார்ப்பதற்கு மொழி புறக்கணிப்பு பற்றிய ஆய்வும் அவசியம். இச்சிறு நூல் அதற்கான பங்களிப்பை சிறியளவிலாவது வழங்கும் என நம்புகின்றோம்.

வாசகர்கள் எமது ஏனைய நூல்களுக்கு தந்த ஆதரவு போல இதற்கும் தருமாறு தாழ்மையாக வேண்டுகின்றோம்.

நன்றி.

**சமூக விஞ்ஞான ஆய்வு மையம்**
**28, செம்மணி வீதி**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

# தமிழ் மொழி புறக்கணிப்புக்கு!
# வயது – 64

இலங்கையில் தனிச்சிங்களச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஆனி 15 ம் திகதியுடன் 64 வருடங்களாகின்றன. இது இன அழிப்பின் ஒரு பகுதியே! இந்த இன அழிப்பு நிலப்பறிப்பு, மொழிப்புறக்கணிப்பு, பொருளாதாரச் சிதைப்பு, கலாச்சார அழிப்பு என வளர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிர்படுகொலையாக மாறியது. தமிழ் மொழிப் புறக்கணிப்பு 1956 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் இன்னமும் முடிவடையவில்லை இதனால் தான் தனிச்சிங்களச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 64 வருடங்கள் கழிகின்ற நிலையில் தமிழ் மொழிப்புறக்கணிப்பு பற்றிய மீள் வாசிப்பு அவசியமாகின்றது.

இலங்கையில் அரச கரும மொழிகளாக ஆங்கிலத்தின் இடத்திற்கு சுதேசிய மொழிகள் இருக்க வேண்டும் என்ற கோரிக்கை சுதந்திரத்திற்கு முன்னரே ஆரம்பித்து விட்டது. 1944 ம் அரசாங்க சபையின் உறுப்பினராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிங்கள மொழி அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்தார். தமிழ் உறுப்பினராக இருந்த நல்லையா "சிங்களமும் தமிழும்" அரச கரும மொழிகளாக இருக்க வேண்டும் என ஜே.ஆரின் பிரேரணைக்கு ஒரு திருத்தத்தை முன்மொழிந்தார். அத்திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரேரணை நிறைவேற்றப்பட்டது. ஆனாலும் டொனமூர் காலம் முழுவதும் பிரேரணை நடைமுறைக்கு வரவில்லை ஆங்கிலமே தொடர்ந்தும் நிர்வாக மொழியாக இருந்தது.

சுதந்திரத்திற்கு பின்னர் இக் கோரிக்கை மீள எழுப்பப்பட்டது. ஆனாலும் நடைமுறைக்கு வரவில்லை. 1951 ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவராக இருந்த S.W.R.D பண்டார நாயக்கா கட்சியிலிருந்து வெளியேறி சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். அதன் போது கட்சியின் கொள்கைத் திட்டத்தில்

"சிங்களமும் தமிழும்" அரச கரும மொழிகளாக இருக்க வேண்டும் என்றே கூறப்பட்டது.

1949ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அகில இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் மொழிக்கு அரச கரும மொழி அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ச்சியாக முன்வைத்து வந்தது. 1954 ம் ஆண்டு நடுப்பகுதியில் எலிசபேத் மகாராணியார் இலங்கைக்கு வருகை தந்தார். அவரது வரவேற்பு நிகழ்வில் நிதி அமைச்சரும், சபை முதல்வருமான ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேசினார். அப் பேச்சின் தமிழ் மொழி பெயர்ப்புக்கூட இடம் பெறவில்லை. இதனை எதிர்க்கும் முகமாக பிரதமர் கொத்தலாவல யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்ட போது அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி கறுப்புக் கொடி போராட்டத்தை நடாத்தியது. யாழ்நகர மண்டப மேடையில் பிரதமர் ஏறியதும் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியைச் சேர்ந்தவர்கள் மேடைக்கு அருகே சென்று கறுப்புக் கொடியைக் காட்டி "பிரதமரே திரும்பிப் போ" எனக் கோஷமெழுப்பினர். பொலிசார் குண்டாந்தடி நடத்தி ஆர்ப்பாட்டக் காரர்களை கலைத்தனர்.

பிரதமர் கொத்தலாவல கொக்குவிலில் நடந்த வரவேற்பு நிகழ்வில் தமிழறிஞர் ஹண்டி பேரின்பநாயகத்தின் வேண்டுகோளின் பேரில் சிங்களம், தமிழ் இரண்டையும் அரச கரும மொழியாக்கும் வகையில் அரசியல் யாப்பு மாற்றப்படும் எனக்குறிப்பிட்டார். ஆனால் கொழும்பு திரும்பியதும் எதிர்ப்பு ஏற்பட்டதால் அடுத்த நாளே அதனை மறுத்து அறிக்கை வெளியிட்டார். "திரிசிங்கள பெரமுனை, பாஸா பெரமுனை" போன்ற அமைப்புக்கள் தமிழ் மொழியை அரச கரும மொழியாக்குவதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்தன. 1954 ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப் பெறத் தொடங்கியது.

இடது சாரிக் கட்சிகளில் லங்காசமசமாஜக்கட்சி சிங்கள - தமிழ் மொழி சம அந்தஸ்தை அதிகம் வலியுறுத்தியது. இது தொடர்பாக 1954ம் ஆண்டு பிற்பகுதியில் கொழும்பு நகர மண்டபத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டியது. இக்கட்சியிலிருந்து பிரிந்து சென்று புரட்சிவாத சமசமாஜக்கட்சியை உருவாக்கிய பிலிப் குணவர்த்தனா தலைமையிலான குழுவினர் கூட்டத்தில் தாக்கு தல்களை மேற்கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பலர் காயமடைந்தனர்.

1955ம் ஆண்டு சிங்கள - தமிழ் மொழிகளின் சமத்துவத்தை வலியுறுத்தி லங்காசமசமாஜக்கட்சியின் தலைவர் டாக்டர் என்.எம். பெரேரா பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். டொனமூரின் அரசாங்க சபையில் பத்து வருடங்களுக்கு முன்னர் சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாக இருக்க வேண்டும் என வாதிட்ட S.W.R.D பண்டாரநாயக்கா அதனை மாற்றி சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என வாதிட்டார். விவாதத்தின் போது "பட்டினங்களிலும் கிராமங்களிலும் வியாபார நிலையங்களிலும் சிறு கடைகளிலும் பெரும் பகுதி வேலை தமிழ் பேசும் மக்களின் கையில் இருப்பதால் தவிர்க்க முடியாத வகையில் சிங்கள மொழி சுருங்கி அருகிவிடும்மென்ற நியாயமான பயம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது". என்று குறிப்பிட்டார். அத்தீர்மானம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

1956ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு களனியில் இடம் பெற்றது அம்மாநாட்டில் "சிங்களம் மட்டும் அரச கரும மொழி" என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இதனை எதிர்த்து அக்கட்சியிலிருந்த தமிழர்கள் பலர் தமது அமைச்சர்கள், பதவியையும் இராஜினமாச்செய்து வெளியேறினர். இவர்களில் ஒருவர் பிற்காலத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த பட்டிருப்பு இராஜமாணிக்கம் ஆவார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் இத்தீர்மானத்தை எதிர்த்து தமிழரசுக்கட்சி 1956ம் ஆண்டு மாசி மாதம் 20ம் திகதி தமிழ்ப் பிரதேசம் எங்கும் ஹர்த்தால் போராட்டத்தை நடாத்தியது இப் போராட்டம் பெரு வெற்றியீட்டியது. தமிழ்ப் பிரதேசத்தில் இடம் பெற்ற முதலாவது ஹர்த்தால் போராட்டம் இது தான்.

ஐக்கிய தேசியக்கட்சியின் களனி மாநாட்டு தீர்மானத்தைத் தொடர்ந்து சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான S.W.R.D பண்டாரநாயக்கா தாம் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்திற்குள் தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வருவேன் எனக் குறிப்பிட்டார் "பிக்கு எக்ஸத் பெரமுனை" உட்பட்ட பல பௌத்த நிறுவனங்கள் பண்டாரநாயக்காவிற்கு ஆதரவளிக்க முற்பட்டன.

1956ம் ஆண்டு தேர்தலின் போது சிறீலங்கா சுதந்திரக்கட்சி, பிலிப் குணவர்த்தனா தலைமையிலான புரட்சிவாத சமசமாஜக்கட்சி, W.தகநாயக்க தலைமையிலான "பாஸா பெரமுனை" C.P.D. சில்வா தலைமையிலான குழு என்பன S.W.R.D பண்டாரநாயக்கா தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணி என்கின்ற கூட்டமைப்பை உருவாக்கி போட்டியிட்டன. "பிக்கு எக்ஸத் பெரமுனை" போன்ற பௌத்த நிறுவனங்கள் வலிமையாக ஆதரித்தன. பண்டாரநாயக்கா "பஞ்ச பலவேகய" என அழைக்கப்படுகின்ற ஐம்பெரும் சக்திகளை அணி திரட்டினார். சிங்கள ஆசிரியர்கள், சிங்களத் தொழிலாளர்கள் சிங்கள விவசாயிகள், சிங்கள ஆயுள் வேத வைத்தியர்கள், பௌத்த மத குருமார்கள் என்போரே இவ் ஐம்பெரும் சக்திகளாவர். தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி பெரு வெற்றியீட்டியது. பண்டாரநாயக்க பிரதமரானார். ஐக்கிய தேசியக் கட்சி 8 ஆசனங்களை மட்டும் பெற்று படுதோல்வியடைந்தது. எதிர்க்கட்சித் தலைமை ஸ்தானத்தைக் கூட ஐக்கிய தேசியக் கட்சியால் கைப்பற்ற முடியவில்லை. லங்கா சமசமாஜக்கட்சி எதிர்க்கட்சி தலைமை ஸ்தானத்தை கைப்பற்றியது. டாக்டர் என்.எம்.பெரேரா எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றார்.

தமிழரசுக்கட்சி 10 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியானது. 1952 ம் ஆண்டு தேர்தலில் 45,331 வாக்குகளை மட்டும் பெற்ற கட்சி இத்தேர்தலில் 1,42,036 வாக்குகளைப் பெற்றது.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து பண்டாரநாயக்க சிங்கள மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிப்படி 1956 ம் ஆண்டு ஆனி 05 ம் திகதி தனிச்சிங்கள மசோதாவை பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தார். தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பைக் காட்ட பாராளுமன்ற வாசலில் சத்தியாக்கிரகம் இருக்கப் போவதாக அறிவித்தது. இதனால் முதல் நாள் இரவே பாராளுமன்றத்தைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அடைக்கப்பட்டன. ஆயுதம் தாங்கிய பொலிசார் சுற்றி நிறுத்தப்பட்டனர்.

1956 ம் ஆண்டு ஆனி 05 ம் திகதி காலை 9.00 மணிக்கு சத்தியாக்கிரக போராட்டம் ஆரம்பமானது. சிங்கள காடையர் கூட்டம் எள்ளாளன் - துட்டகைமுனு யுத்தம் என்ற கோசத்தோடு பாராளுமன்றத்திற்கு முன்னால் இருந்த காலி முகத்திடலுக்கு பண்டாரநாயக்காவினால் கொண்டு வரப்பட்டனர். தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகத்தின் நோக்கத்தை விளக்கி சிங்களத்தில் துண்டுப் பிசுரத்தை வெளியிட்டது. அப்பிரசுரங்களை விநியோகிக்கச் சென்ற போது தமிழரசுக்கட்சித் தொண்டர்கள் காடையர்களினால் தாக்கப்பட்டனர். தாக்குதலையும் பொருட்படுத்தாது தலைவர்களும் தொண்டர்களும் காலி முகத்திடலின் தென் பகுதியிலிருந்து பாராளுமன்றத்தை நோக்கி நடந்தனர். சிறிது தூரம் செல்வதற் கிடையில் சிங்களக் கொடி தாங்கிய காடையர் கூட்டம் மூர்க்கத் தனமாக சத்தியாக்கிரகிகளை தாக்கியது.

கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கு.வன்னிய சிங்கத்தின் சட்டை கிழிக்கப்பட்டு தாக்கப்பட்டதால் மூக்கிலிருந்து இரத்தம் வடிந்தது. டாக்டர் ஈ.எம்.வி நாகநாதன் செனட்டர் நடராசா, ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் கந்தையா, திருகோண

மலை பாராளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இராஜவரோதயம், செ.இராசதுரை, ஆகியோர்களும் தாக்குதல்களுக்கு உள்ளாகினர். தொண்டர் நா.செல்லையாவின் காது கடித்து கிழிக்கப்பட்டது. தந்தை செல்வாவிற்கு முன்னாலேயே அவரது இரு மகன்களும் தாக்கப்பட்டனர்

இக்கட்டத்தில் திடீரென பெருமழை பெய்தது. காடையர் கூட்டம் கலைந்து ஓடியது. இக்கட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பிலிருந்து வந்தவர்களும் இணைந்து கொண்டதால் சத்தியாக்கிரகளின் எண்ணிக்கை அதிகரித்தது. சத்தியாக்கிரகிகள் புதிதாக வந்தவர்களையும் இணைத்துக் கொண்டு பாராளுமன்றக் கட்டிடத்தை நோக்கி நடந்தனர். ஒரு கட்டத்தில் பொலிசார் தடுத்து நிறுத்தவே சத்தியாக்கிரகிகள் அனைவரும் புற்தரையில் அமர்ந்து போராட்டத்தை நடத்தினர்.

மழையோடு கலைந்து சென்ற காடையர் கூட்டம் ஆயிரக்கணக்கில் சேர்ந்து மீள வந்தது. பொலிசார் பார்த்துக் கொண்டிருக்கக் கூடியதாகவே சத்தியாக்கிரகிகளை சுற்றி வளைத்து தாக்குதல் நடாத்தினர். கற்களை வீசினர். கல்வீச்சினால் அமிர்தலிங்கத்தின் நெற்றி பிளக்கப்பட்டது. சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் வி.என்.நவரத்தினம் மயக்கமுற்று மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். தலைவர்களை விட சத்தியாக்கிரகிகளும் பலர் காயமடைந்தனர். காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டம் பகல் 1.00 மணிக்கு நிறுத்தப்பட்டது. இத்தினத்தில் காலி முகத்திடலுக்கு அப்பால் கொழும்பில் பல இடங்களிலும் தமிழர்கள் தாக்கப்பட்டனர்.

கொழும்புக்கு வெளியிலும் தமிழர்கள் தாக்கப்பட்டனர். அம்பாறை மாவட்ட சிங்களக் குடியேற்றப்பகுதிகளில் தமிழர்கள் திட்டமிட்டு தாக்கப்பட்டனர். கல்லோயா அபிவிருத்தி சபையின் கீழ் பணியாற்றிய தமிழ் ஊழியர்களும் அவர்களது குடும்பங்களும்

மோசமாக தாக்குதலுக்குள்ளாகினர். இதனால் கோபமுற்ற தமிழ் இளைஞர்கள் துறை நீலாவணையில் பொலிசாரின் ஜீப் வண்டியை தாக்கி எரியூட்டினர்.

காலி முகத்திடல் சத்தியாக்கிரக போராட்டம் பற்றி கவிஞர் காசி ஆனந்தன் அருமையான கவிதை ஒன்றை எழுதினார் அக்கவிதை இது தான்.

பொய்யில்லை புகழ்ச்சியில்லை இகழ்ச்சியில்லை!
புனைகதையில் வருகின்ற நிகழ்ச்சியில்லை!
ஐயையோ ஒரு மகனை தந்தை முன்னே அடிக்கின்றார், அந்தரத்தில் வீசுகின்றார்!
நையத்தான் புடைக்கின்றார் ஏனையோரை
நடுங்காது காலி முகத்திடலில்
இரத்த மைகொண்டு வரைகின்றார்! தமிழர் ஏடு!
மானத்தின் ஏடன்றோ!
வாழி! வாழி!

இலங்கைப் பாராளுமன்றத்துக்கான நான்காவது தேர்தல் 1960ம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்றது. தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களில் 19 தொகுதிகளில் போட்டியிட்டு 15 தொகுதிகளில் வெற்றியீட்டியது. இதைவிட கட்சியின் ஆதரவுடன் நிந்தவூர், பொத்துவில் தொகுதிகளில் சுயேட்சையாக போட்டியிட்ட முஸ்லீம் வேட்பாளர்களும் வெற்றிபெற்றனர். தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 50 ஆசனங்களையும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி 46 ஆசனங்களையும் கைப்பற்றியது. ஆட்சி அமைப்பதற்கான தனிப் பெரும்பான்மையை எந்தக் கட்சியும் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அதிகூடிய ஆசனங்களைப் பெற்ற ஐக்கியதேசியக் கட்சி, தமிழரசுக் கட்சி ஆதரவு தரும் என்ற எதிர்பார்ப்பில் ஆட்சியை அமைத்தது. டட்லிசேனநாயக்க பிரதமராகப் பொறுப்பேற்றார்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைத்ததும் பாராளு மன்றத்தில் தமிழரசுக் கட்சியின் ஆதரவைக் கேட்டது. தமிழரசுக் கட்சி இரண்டு பெரிய சிங்களக் கட்சிகளிடமும் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தது.

அவையாவன.

1. பண்டா - செல்வா உடன்படிக்கையில் கூறப்பட்டதன் பிரகாரம் பிரதேச சபைகள் நிறுவப்படல் வேண்டும். அதற்கிடையில் தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றம் நிறுத்தப்படல் வேண்டும்.
2. பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள் யாவும் தமிழ் மொழிக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டும்.
3. இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தில் குறிப்பிட்ட திகதி என்பது நீக்கப்பட்டு இரண்டு தலைமுறைக்கு இந்நாட்டில் பிறந்தோர் அனைவருக்கும் குடியுரிமை வழங்குவதன் மூலம் "நாடற்ற தமிழர்" என்ற நிலை நாளடைவில் மாற வேண்டும்.
4. குடியுரிமைப் பிரச்சினை தீரும்வரை 06 நியமனப் பிரதிகளில் 04 பேர் மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த இலங்கை ஜனநாயக காங்கிரசினால் நியமிக்கப் பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இந்த 4 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக சிங்களப் பெரிய கட்சிகளுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையே பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படல் வேண்டும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் அரசின் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெற வேண்டும் என்றும் தமிழரசுக்கட்சி குறிப்பிட்டது. இந்தக் கோரிக்கைகளை எழுத்து வடிவில் பெற்றுக் கொண்ட C.P.D.சில்வா, A.P.ஜெயசூரியா, மைத்திரிபாலசேனநாயக்கா, பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா

ஆகியோர் தமிழரசுக்கட்சியின் கோரிக்கைகள் பண்டார நாயக்காவின் கொள்கைகளுக்கு ஏற்ப இருப்பதால் அதனை ஏற்றுக் கொள்வதாகக் கூறினர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனான உடன்பாட்டின்படி 1960ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் திகதி பாராளுமன்றத்தில் சிம்மாசனப் பிரசங்கம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது தமிழரசுக்கட்சி எதிர்த்து வாக்களித்தது. இதனால் டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கவிழ்ந்தது. தொடர்ந்து மாகாதேசாதி பதியிடம் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையில் லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன இணைந்து ஆட்சி அமைப்பதற்கான கடிதத்தைக் கையளித்த போது தமிழரசுக் கட்சியும் அதில் கையொப்பமிட்டு ஆதரவளித்தது.

மகாதேசாதிபதி எதிர்க்கட்சியின் ஆதரவுக்கடிதத்தை கணக்கில் எடுக்காது அதுவரைகால மரபை மீறி பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு ஏற்பாடு செய்தார். இதனால் 1960ம் ஆண்டு யூலை மாதம் மறு தேர்தல் இடம்பெற்றது. இக் காலத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கை சுதந்திரக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ஆனாலும் அவர் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடவில்லை. இத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தமிழர்கள் தம்மைத் தோற்கடித்தார்கள் என இனவாதப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியை "சிறீலங்கா சமஸ்டிக் கட்சி" எனக் கேலி செய்தது. எனினும் 1960 மார்ச் தேர்தலில் 50 ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி 30 ஆசனங்களை மட்டும் பெற்று தோல்வியடைந்தது. சிறீலங்கா சுதந்திரக்கட்சி 75 ஆசனங்களைப் பெற்று தனிப் பெரும் பான்மையுடன் ஆட்சியமைக்கக் கூடிய நிலைக்கு வந்தது. தமிழரசுக் கட்சி 21 தொகுதிகளில் போட்டியிட்டு 16 ஆசனங்களைக்

கைப்பற்றியது.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி சிறீமாவோ பண்டார நாயக்காவின் தலைமையில் ஆட்சியமைத்தது. சிறீமாவோ பண்டாரநாயக்கா செனற் சபை மூலம் பாராளுமன்ற உறுப்பினராகி பிரதமராக பதவி ஏற்றார். இலங்கையின் முதல் பெண் பிரதமராக மட்டுமல்ல உலகின் முதலாவது பெண் பிரதமராகவும் இவர் பதவி ஏற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைத்த ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியுடனான தேர்தலுக்கு முந்தைய உடன்பாட்டை நிறைவேற்றப் போவதாகக் காட்டிக் கொண்டது. சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழ்மொழிபெயர்ப்பும் வாசிக்கப்பட்டதால் அதில் தமிழரசுக் கட்சி கலந்துகொண்டது எனினும் நடுநிலை வகித்தது. தேர்தலுக்கு முன்னர் உடன்பட்ட விடயங்கள் தொடர்பாக அதனை நடைமுறைப்படுத்துவது பற்றி பிரதமர் தலைமையிலான அமைச்சுக் குழுவுக்கும் தமிழரசுக்கட்சியின் தலைவர்களுக்கும் இடையே அலரிமாளிகையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போதே எந்தவித முன்னறிவித்தலுமின்றி சிங்கள மொழியை நாடு முழுவதும் நீதிமன்ற மொழியாக்கும் சட்டத்ததை நீதி அமைச்சர் சாம் P.C. பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதனால் அரசுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையேயான உறவு சிதைவடைந்தது. சட்டமூலத்திற்கு தமிழரசுக்கட்சி பலமான எதிர்ப்பைத் தெரிவித்தது எனினும் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதே சமயம் தமிழ்மொழி உபயோகச் சட்டத்தின் கீழ் மிகக் குறைந்த உரிமைகள் வழங்கும் சட்டத்தையும் நீதிமந்திரி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். தமிழரசுக் கட்சியின் கடுமையான எதிர்ப்பினால் அந்த முயற்சி பின்னர் கைவிடப்பட்டது.

1961ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் வடக்கு

கிழக்கு உட்பட நாடு முழுவதும் தனிச் சிங்களச் சட்டம் பூரணமாக அமுல்படுத்தப்படும் என அரசு அறிவித்தது. இதனை நடைமுறைப் படுத்துவதற்காக சிங்கள உத்தியோகஸ்தர்களும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டனர். தமிழரசுக் கட்சி இதனை எதிர்த்து போராட்டத்துக்கு ஆயத்தமாகியது. தமிழரசுக் கட்சியின் 7வது மாநில மாநாடு 1961ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இம் மாநாட்டில் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து நேரடி நடவடிக்கைகளில் இறங்குவது என்றும் பெப்ரவரி 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் போராட்டத்தை ஆரம்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மாநாட்டுத் தீர்மானத்தின் படி போராட்டத்தின் முதல்படியாக தந்தை செல்வா தலைமையில் மக்கள் ஊர்வலமாக யாழ் அரசாங்க செயலகத்திற்குச் சென்று தமிழ் மொழியில் அரச செயலக நிர்வாகம் நடாத்தப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை சமர்ப்பித்தனர்.

மாநாட்டுத் தீர்மானத்தின்படி 1961ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ம் திகதி யாழ்ப்பாண அரசாங்க செயலகத்திற்கு முன்னால் சத்தியாக்கிர போராட்டம் ஆரம்பமானது. ஒரு நாளைக்கு ஒரு தொகுதியின் மக்களால் அத்தொகுதியின் உறுப்பினர் தலைமையில் போராட்டத்தை தொடர்ந்து நடாத்துவதென முடிவு செய்யப்பட்டது. பொலீசார் கைதுசெய்யலாம் எனக் கருதியே இவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்டது. முதல் நாள் சத்தியாக்கிரக போராட்டம் தந்தை செல்வா தலைமையில் இடம் பெற்றது. காங்கேசன்துறைத் தொகுதி மக்கள் சத்தியாக்கிரக போராட்டத்தில் பங்குபற்றினர். ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளியில் நின்று போராட்டக் காரர்களுக்கு உதவிகளை வழங்கினர்.

1ம் நாள் திட்டமிட்டபடி யாழ் அரசாங்க செயலக வாசலில் எவரும் உள்ளே செல்லவிடாது சத்தியாக்கிரகிகள் போராட்டத்தில்

ஈடுபட்டனர். போலீசார் பிரதான வாசலினூடாக அலுவலர்கள் உள்ளே செல்வதற்கு பாதையை அமைக்க முற்பட்ட போது அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் அவ்விடத்துக்கு வந்து பாதைக்குக் குறுக்கே படுத்தனர். பொலீசார் பலாத்காரமாக சத்தியாக்கிரகிகளைத் தூக்கிவீசினர். இதனைப் பார்த்துக்கொண்டு வெளியில் நின்ற மக்களும் நூற்றுக்கணக்கில் சத்தியாக்கிரகிகளோடு சேர்ந்தமையினால் பொலீசாரின் முயற்சி தோல்வியடைந்தது.

இதே தினம் பகல் 11 மணியளவில் மேல் நீதிமன்றத் திறப்புவிழா இடம்பெற்றது. இதற்குரிய ஆணையை அரசாங்கத்தின் சார்பில் அரசாங்க அதிபர் நீதியரசரிடம் கொடுப்பதற்கு செல்லவேண்டியிருந்தது. சத்தியாக்கிரகிகள் அரசாங்க அதிபரின் வாசஸ்தலம் அமைந்திருந்த பழைய பூங்கா வாசலிலும் மறியல் போராட்டத்தை மேற்கொண்டனர். பொலீசார் குண்டாத் தடிகளினால் சத்தியாக்கிரகிகளைத் தாக்கி அவர்களுக்கூடாக அரசாங்க அதிபரின் வாகனத்தை கொண்டு செல்ல முற்பட்டனர். இதில் நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் E.M.B. நாகநாதன் உட்பட பல சத்தியாக்கிரகிகள் காயமடைந்தனர்.

2ம் நாள் சத்தியாக்கிரகப் போராட்டம் வட்டுக்கோட்டை தொகுதி மக்களினால் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. அன்றும் அரச ஊழியர்களை அரசாங்க செயலகத்திற்குள் செல்லவிடாமல் வாசலை மறித்து சத்தியாக்கிரகிகள் அமர்ந்தனர். முதல்நாள் பொலீசார் தாக்கியதற்கு கடுமையான கண்டனம் பல்வேறு தரப்பிலிருந்தும் தெரிவிக்கப்பட்டதனால் 2ம் நாள் அவர்களின் அடக்குமுறை சற்றுக் குறைவாக இருந்தது எனினும் அரச ஊழியர்களை சத்தியாக்கிரகிகளிற்கூடாக பொலீசார் அழைத்துச் செல்ல முற்பட்டபோது அரச ஊழியர்கள் மறுப்புத்தெரிவித்தனர்.

3ம் நாள் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் V.A. கந்தையா தலைமையில் ஊர்காவற்துறை தொகுதி மக்களும் நாலாம் நாள் சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் V.N. நவரட்னம் தலைமையில் சாவகச்சேரி மக்களும் சத்தியாக் கிரகத்தில் கலந்துகொண்டனர். இவ்வாறு தொடர்ந்து 50 நாட்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. இப் போராட்டத்தினால் யாழ் மாவட்ட அரச நிர்வாகம் முழுமையாக ஸ்தம்பிதமடைந்தது.

1961ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சத்தியாக்கிரகப் போராட்டம் விஸ்தரிக்கப்பட்டது. அன்று யாழ்ப்பாணத் தாக்குதல்களுக்கு ஆட்சேபனை தெரிவித்து மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் ஹர்த்தால் அனுஸ்டிக்கப் பட்டது. அடுத்தநாள் பெப்ரவரி 28ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க செயலகத்தின் முன்னால் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் பட்டது. தொடர்ந்து 1961ம் ஆண்டு மார்ச் மாதம் 4ம் திகதி திருகோணமலையில் அரசாங்க செயலகத்தின் முன்னால் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது. பொலீசார் சத்தியாக்கிரகிகள் மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர். மூதூர்த் தொகுதி 1வது பாராளுமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் உட்பட 3 பேர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த ஏகாம்பரம் மார்ச் 22ம் திகதி சிகிச்சை பயனளிக்காமல் மரணமடைந்தார்.

தொடர்ந்து மன்னார், வவுனியா அரசாங்க செயலகங்களிற்கு முன்னாலும் சத்தியாக்கிரகம் விஸ்தரிக்கப்பட்டது. சத்தியாக்கிரகம் பற்றி செனற் சபையில் உரையாற்றிய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கா "வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கமே இல்லை" எனக் குறிப்பிட்டார். சத்தியாக்கிரக போராட்டம் தொடர்பாக அச்சமுற்ற அரசாங்கம் போராட்டத்தை நிறுத்துவது தொடர்பாக தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தது. அரசாங்கத்தின் சார்பில் நீதி அமைச்சர் P.N. பெர்ணான்டோ

பங்குபற்றினார். 1961ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 5ம் திகதி இரவு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் மு.திருச்செல்வத்தின் கொழும்பு இல்லத்தில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. மொழி உரிமை தொடர்பாக மிகக் குறைந்த கோரிக்கைகளில் கூட உடன்பாடு ஏற்படாததினால் தமிழரசுக் கட்சி போராட்டத்தை தொடர்ந்து நடாத்துவது எனத் தீர்மானித்தது. போராட்டத்தின் தீவிரம் காரணமாக அரசாங்கம் பங்கீட்டு உணவை வழங்காது மக்களைப் பணியவைக்கவும் முற்பட்டது. ஆனால் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை.

சத்தியாக்கிரகப் போராட்டத்தை நீண்ட நாட்களாக மேற்கொண்ட தமிழரசுக்கட்சி போராட்டத்தை வேறு துறைகளிலும் விரிவாக்க முன்வந்தது. இதற்காக அரச தபால் சேவைச் சட்டத்தை மீறி தமிழரசு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1961ம் ஏப்ரல் மாதம் 14ம் திகதி பகல் 12 மணிக்கு தந்தை செல்வா தமிழரசு தபால் சேவையை ஆரம்பித்து வைத்தார். ஆயிரம்பேர் வரிசையில் நின்று தமிழரசு தபால் முத்திரைகளைப் பெற்றுக்கொண்டனர். தமிழரசு தபால் சேவை தபால்மா அதிபராக செனட்டர் நடராசா நியமிக்கப்பட்டார். தமிழரசு தபால் பெட்டிகள் பல இடங்களிலும் வைக்கப்பட்டன. குறிக்கப்பட்ட நாட்கள் தமிழரசு தபால் சேவை செயற்பட்டது.

சத்தியாக்கிரகப் போராட்டத்தினால் ஆத்திரமுற்ற அரசாங்கம் அவசரகால ஊரடங்கு சட்டத்தை பிறப்பித்தது. இராணுவத்தின் மூலம் போராட்டத்தை நசுக்க முற்பட்டது. 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் திகதி 12 மணிக்கு அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதேவேளை 48 மணிநேரம் ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டது. யாழ் அரசாங்க செயலகத்தின் முன்னால் அமைதியாக போராட்டம் நடாத்திய சத்தியாக்கிரகிகள் இராணுவத்தினரால் மோசமாகத் தாக்கப்பட்டனர். பழனியப்பன்

என்ற இளைஞரது தொடை துளைக்கப்பட்டு மயக்க நிலையில் விடப்பட்டார். பெண் சத்தியாக்கிரகிகள் இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக பேரூந்துகளில் ஏற்றப்பட்டு தனிமையான இடங்களில் அநாதைகளாக விடப்பட்டனர். தமிழரசுக்கட்சி தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு பொலீஸ் இராணுவ முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இராணுவ ஆட்சியின் கீழ் விடப்பட்டன. திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் உட்பட தலைவர்களும் பிரதான தொண்டர்களுமாக 74 பேர் கைது செய்யப்பட்டு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டு பனாகொட இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டனர். தமிழரசுக் கட்சி தடைசெய்யப்பட்டதோடு அதன் உத்தியோக பூர்வ பத்திரிகையான "சுதந்திரன்" பத்திரிகையும் தடைசெய்யப்பட்டது. சுதந்திரன் பத்திரிகை அலுவலகம் சீல் வைக்கப்பட்டது. பத்திரிகைத் தணிக்கையும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

சத்தியாக்கிரகப் போராட்டம் நசுக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்சியின் 2ம் நிலைத் தலைவர்கள் இரகசிய ஏடுகளை வெளியிட்டனர். சத்தியாக்கிரகம் என்றும் ஆங்கில இதழ் மாதம் இரு தடவை தட்டச்சில் வெளிவந்தது. "தமிழன் கண்ணீர்" என்ற ஒரு தமிழ் இதழும் வெளியிடப்பட்டது. பகிரங்கமாக கூட்டங்களை ஒழுங்கு செய்ய முடியாதிருந்ததனால் கட்சியின் 2ம் மட்டத் தலைவர்கள் கோவில்களில் பிராத்தனைகளை ஒழுங்கு செய்து அங்கு உரையாற்றினர்.

சத்தியாக்கிரகப் போராட்டம் வடகிழக்கில் இடம்பெற்றபோது மலையக மக்களும் அதற்கு வலிமையான ஆதரவினை வழங்கினர். இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் தொண்டமான் சத்தியாக்கிரக போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு நேரடியாகச் சென்று சத்தியாக்கிரகிகளை உற்சாகப்படுத்தினார். வவுனியா,

மன்னார் மாவட்டங்களில் செயற்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதிநிதிகள் நேரடியாகவே போராட்டத்தில் பங்கு பற்றினர். வவுனியா மாவட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதி நடேசபிள்ளை தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் சேர்த்து கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சத்தியாக்கிரகப் போராட்டம் நசுக்கப்பட்டதைக் கண்டித்து மலையகப் பெரும் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர். இதனைத் தடுக்கும் வகையில் 1961ம் ஆண்டு ஏப்ரல் 24ம் திகதி தோட்டத் தொழிலை அத்தியாவசிய தேவையாக்கும் சட்டவிதிகளை அரசாங்கம் பிரகடனம் செய்தது. எனினும் இதை மீறி 1961ம் ஆண்டு ஏப்பிரல் 25ம் திகதி 5 இலட்சம் தோட்டத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இப் போராட்டம் வெற்றிகரமாக நடந்தது. இதே தினம் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் தொண்டமான் தமிழரசுக் கட்சியின் 4 அம்சக்கோரிக்கையை அரசிற்கு சமர்ப்பித்தார். போராட்டம் பெருந்தோட்டப் பகுதிகளிலும் விஸ்தரிக்கப்படலாம் எனக் கருதிய அரசாங்கம் தோட்டப்பகுதிகளுக்கும் இராணுவத்தை அனுப்பியது.

சத்தியாக்கிரகப் போராட்டம் நசுக்கப்பட்டு பல மாதங்களின் பின்னர் 1961ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். எனினும் தமிழரசுக் கட்சியின் தடை நீங்க மேலும் சில மாதங்கள் சென்றன.

தமிழ் மக்களின் அரசியல் போராட்ட வரலாற்றில் 1961ம் ஆண்டு சத்தியாக்கிரக போராட்டம் மிகவும் முக்கியமான போராட்டமாகும். தமிழரசுக்கட்சி மிக உச்ச வகையில் நடாத்திய போராட்டம் என இதனைக் கூறலாம். ஆனாலும் வலுவான 2ம் மட்டத் தலைவர்களும் 2மட்ட திட்டங்களும் உருவாக்கப்படாததினால் தலைவர்கள் கைது செய்யப்பட்டதும் போராட்டச் செயற்பாடுகளும்

முடங்கின. இந்தப் போராட்டத்தின் பின்னர் எந்த வலிமையான போராட்டத்தையும் தமிழரசுக்கட்சி நடாத்தவில்லை. இதற்குப் பின்னர் போராட்டச் செயன்முறையை அக்கட்சி கைவிட்டதெனக் கூறலாம். இந்தப் போக்கின் உச்சமாக 1965ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்திலும் தமிழரசுக்கட்சி இணைந்து கொண்டது தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தரான மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகவும் பொறுப்பேற்றார்.

தமிழரசுக்கட்சி போராட்டத்தைக் கைவிட்டு இணக்க அரசியலுக்கு சென்றதனால் போராட்டக்களம் 1968ம் ஆண்டிலிருந்து தமிழ் இளைஞர்களின் கைகளுக்கு மாறியது. அதன் தொடர்ச்சி யாகவே 30 வருட ஆயுதப் போராட்டத்தை நாம் அவதானிக்கலாம்.

1956 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ம் திகதி தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து வந்த கடும் எதிர்ப்பினால் 1958 ம் ஆண்டு தமிழ் மொழி உபயோகச்சட்டம் நிறைவேற்றப்பட்டது இச்சட்டம் பெரியளவிற்கு நடைமுறைக்கு வரவில்லை.

தனிச்சிங்களச்சட்டம் தமிழ் அரச உத்தியோகத்தர்களுக்கு சிங்களத் தகுதி இல்லையேல் பதவி உயர்வு, சம்பள உயர்வு, இல்லை என விதித்தது. இதனால் பாதிப்படைந்த அரசாங்க எழுது வினைஞரான கோடீஸ்வரன் "இச்சட்டம் சோல்பரி யாப்பின் 29 வது பிரிவிற்கு எதிரானது" என வழக்குத் தொடுத்தார். கேகாலை மாவட்ட நீதிமன்றம் கோடீஸ்வரனுக்கு சார்பாக தீர்ப்பு வழங்கியது. இவ்வழக்கு மேன்முறையீடாக உயர் நீதிமன்றத்திற்கு சென்ற போது உயர் நீதிமன்றம் அரசாங்கத்திற்கு சார்பாக தீர்ப்பு வழங்கியது. கோடீஸ்வரன் பிரித்தானிய உயர் நீதிமன்றமான கோமறைக் கழகத்திற்கு மேன்முறையீடு செய்தார். அந் நீதிமன்றம் கோடீஸ் வரனுக்கு சார்பாக தீர்ப்பு வழங்கிய போதும் அத்தீர்ப்பு நடைமுறைக்கு வரவில்லை.

1966ம் ஆண்டு தமிழ் மொழி விசேட மசோதா பாராளு மன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1965 ம் ஆண்டு கைச்சாத்திடப் பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படை யிலேயே இம் மசோதா பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதை எதிர்த்து இடது சாரிகள் உட்பட சிங்கள இன வாதிகள் மிகப் பெரும் ஆர்ப்பாட்டத்தை கொழும்பு விகாரமாதேவி பூங்காவிலிருந்து பாராளுமன்றத்தை நோக்கி நடாத்தினர். ஆர்ப்பாட்ட ஊர்வலம் கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரித்தானிய தூதுவராலயத்திற்கு அருகே பொலிசாரால் மறிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலீசார் சுட்டதில் பௌத்த பிக்கு ஒருவர் கொல்லப்பட்டார். அவர் இறந்த இடத்திலேயே அவருக்கான நினைவுச் சின்னம் கட்டப்பட்டு இன்று வரை பராமரிக்கப்படுகின்றது.

1956ம் ஆண்டு தனிச்சிங்களச்சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும் அது பாராளுமன்றச் சட்டமாக இருந்ததே ஒழிய அரசியல் யாப்புச் சட்டத்தின் ஒரு ஏற்பாடாக இருக்கவில்லை. 1972 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது குடியரசு யாப்பு தனிச்சிங்களச் சட்டத்திற்கு அரசியல் யாப்பு அந்தஸ்தினைக் கொடுத்தது. அதில் சிங்கள மொழி இந்நாட்டின் அரச கரும மொழியாக இருக்கும் என தெளிவாகக் கூறப்பட்டது. இது விடயத்தில் கணவர் பண்டார நாயக்கா தொடக்கி வைத்ததை மனைவி சிறிமாவோ பண்டார நாயக்கா முடித்து வைத்தார்.

தமிழ் மொழியின் உபயோகம் 1958ம் ஆண்டின் தமிழ் மொழி உபயோகச் சட்டத்தின் படி இருக்கும் எனவும் கூறப்பட்டது. எனினும் இது ஒரு போதும் அரசியல் யாப்பின் ஒரு ஏற்பாடாக பொருள் கொள்ளக் கூடாது எனவும் கூறப்பட்டது.

1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு சிங்கள மொழி இந்நாட்டின் அரச கரும மொழியாக இருக்கும் எனக் கூறப்பட்ட அதே வேளை "சிங்களமும், தமிழும் இந் நாட்டின் தேசிய

மொழியாக இருக்கும் எனவும் கூறப்பட்டது"

1987 ம் ஆண்டு யூலை மாதம் 29 ம் திகதி இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன் படி அரசியல் யாப்பிற்கு கொண்டுவரப்பட்ட 13வது, திருத்தப்படியும் பின்னர் கொண்டு வரப்பட்ட 16வது திருத்தப்படியும் தமிழ் மொழி அரசகரும மொழி யாக்கப்பட்டது. இந்த ஏற்பாடு தமிழ் மக்கள் செறிவாக வாழ்கின்ற திருகோணமலை, அம்பாறை, நுவரேலியா மாவட்டங்களில் கூட இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. தமிழ் மக்கள் சம்பந்தமான விவகாரங்களில் சட்டமும் மௌனமாக இருக்கும் என்பதற்கு இவை பெரும் எடுத்துக்காட்டுக்கள்.

இனப்பிரச்சினை என்பது தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது அழிக்கப்படுவது தான். அதாவது தேசத்தைத் தாங்குகின்ற தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பவற்றை அழிக்கப்படுவது தான்.

இந்த வகையில் தமிழ் மொழியை அழிப்பது இலங்கை அரசின் இலக்காக இருக்கும் போது அரசியல் யாப்பு ஏற்பாடுகளும் தொடர் மௌனத்திலேயே இருக்கும்.

இலங்கையில் தமிழ் மொழிப் புறக்கணிப்பு தொடர் கதைதான்.

## இதுவரை வெளிவந்த நூல்கள்

1. நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கையும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
2. இந்தியாவும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
3. நினைவு கூர்தல் - 2017 - நிலாந்தன்
4. "தமிழ் அரசியலின் இலக்கும் வழிவரைபடமும்" சி.அ.யோதிலிங்கம்
5. மோடியின் இலங்கைப் பயணமும் மலையகமும். சி.அ.யோதிலிங்கம்
6. இந்து சமுத்திரமும் சீனாவும். - கலாநிதி.கே.ரீ.கணேசலிங்கம்
7. வட - கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
8. இனப்பிரச்சிகைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள். - சி.அ.யோதிலிங்கம்
9. ஈழத்தமிழர் அரசியல் வரலாறு - 1883 தொடக்கம் 1968 வரை (சுருக்க குறிப்புக்கள்) பாகம் - 01 - சி.அ.யோதிலிங்கம்
10. வட கொரியாவும் சர்வதேச அரசியலும் கலாநிதி. கே.ரீ. கணேசலிங்கம்
11. இலங்கை இந்திய ஒப்பந்தமும் தமிழ் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
12. மலையக மக்களின் அடையாளம் எது? - சி.அ.யோதிலிங்கம்
13. ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் வளர்ச்சிக்கட்டங்கள் - சி.அ.யோதிலிங்கம்
14. 2009 இற்குப் பின்னரான தமிழ் இராஜதந்திரம் - நிலாந்தன்
15. தமிழ்த் தேசியம்! நெருக்கடிகளும், வாய்ப்புக்களும் சி.அ.யோதிலிங்கம்
16. கன்னியாவைப் பாதுகாப்போம் - சி.த. காண்டீபன், சி.கமலகாந்தன், சி.அ.யோதிலிங்கம்
17. இளைய தலைமுறைகளுக்கு ஞாபகங்களை கடத்துங்கள் - நிலாந்தன்
18. மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும் - சி. அ. யோதிலிங்கம்
19. புதிய அரசியல் கலாச்சாரமே இன்றைய தேவை - சி.அ.யோதிலிங்கம்